# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 29/நகராட்சி/2019**
**நாள் : 14/06/2019**

**திரு K. திருமுருகன்,**
**ஆற்காடு – 632 503.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஆற்காடு நகராட்சி,**
**ஆற்காடு – 632 503.** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், ஆற்காடு, கொல்லபாளையம் தெரு, 28–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. திருமுருகன் என்பவரின் 15.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 29/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப் படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம், ஆற்காடு, கொல்லபாளையம் தெரு, 28–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. திருமுருகன் என்பவர், தான் ஆற்காடு நகரில் AKS Metals என்ற பெயரில் காலம் சென்ற முகமது காதர் வஃப்பு எஸ்டேட்டுக்கு சொந்தமான இடத்தில் 2013–ஆம் ஆண்டு முதல் கடை வைத்து வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும், அக்கடையின் அப்போதைய உரிமையாளர் மற்றும் முத்தவல்லி திருமதி தாஹீர் உன்னிசா பேகம் மற்றும் அவரது மகன் திரு R. ஹசன் அலி அக்பர்ஆகியோரிடம் மேற்கொண்ட வாய்மொழி ஒப்பந்தம் மூலம் ரொக்கம் ரூ.15 லட்சம் மற்றும் மாத வாடகை ரூ.15,000/– வழங்க ஒப்புக் கொண்டு வியாபாரம் செய்து வந்ததாகவும், இந்நிலையில் தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தனது கடையைக் காலி செய்ய வலியுறுத்தியதால், கடையைக் காலி செய்ய மறுத்ததுடன் ஆற்காடு உரிமையியல் நீதிமன்றத்தில் 29/2016 எண்ணிட்ட அசல் மனுவினை தாக்கல் செய்து 29.11.2017 நாளிட்ட தீர்ப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில், திரு R. ஹசன் அலி அக்பர் என்பவர் தொடர்ந்த வழக்கில், தாவா சொத்தை இடித்து அப்புறப்படுத்த மாண்புமிகு உயர்நீதிமன்றம் ஆணையிடப்படாத நிலையில், கடைகளை இடித்து அப்புறப்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டு தனி நபர்களின் விவகாரத்தில் ஆற்காடு நகராட்சி ஆணையர் தலையிட்டு ரூபாய்.1,56,140–ஐ தன்னிச்சையாக செலவு செய்து அரசுக்கு இழப்பினை ஏற்படுத்தியதற்கு நகராட்சி ஆணையரின் சுயநலம் கைமாறிய கையூட்டு மற்றும் மேலிடத்து அழுத்தமே காரணம் எனத் தெரிவித்து, இது சம்பந்தமாக உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் அவரது சாட்சியாளர் ஆகியோரிடம் 14.03.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து, மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள், விசாரணையின் போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. காலம் சென்ற முகமது காதர் வஃப்பு எஸ்டேட்டுக்கு சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்ட முறையீட்டு மனுதாரர் பொறுப்பில் உள்ள கடையினை அகற்றுவது சம்பந்தமாக இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் திரு K. திருமுருகன் அவர்களால் 22/18 மற்றும் 4/19 எண்களிட்ட அசல் மனுக்கள் முறையே ஆற்காடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளன. சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு R. ஹசன் அலி அக்பர் என்பவர் தாக்கல் செய்துள்ள 5005/2019 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவும் நிலுவையில் உள்ளதாக விசாரணை மூலம் அறியமுடிகிறது. ஆற்காடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் வேலூர் மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்குகள் தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பொருட்பாடு குறித்து இம்முறைமன்ற நடுவம் விசாரணை ஏதும் செய்ய இயலாது. எனவே, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–இன் படி முறையீட்டு மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, **ஜூன்** திங்கள், 14–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

25/6/19

25/6/19

பெறுநர்

1. திரு K. திருமுருகன்,
**எண்.28, கொல்லபாளையம் தெரு,**
**ஆற்காடு,**
**வேலூர் மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
**ஆற்காடு நகராட்சி,**
**ஆற்காடு – 632 503**

**நகல் :** முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**